<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 749/2023</u>

<u>வழக்கு சாட்சி PW-10</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர்.எப்சிபா டெபிலா | தாலுகா | : | பாளையங்கோட்டை |
| தந்தை பெயர் | : | ஜான் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | பாளையங்கோட்டை | வயது | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 29th, 2025.

**(2ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. மற்ற எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது முக்கூடல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் 19.09.2022 அன்று அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, இரவு சுமார் 10.15 மணியளவில் ரவுத்தர்பேரியை சேர்ந்த கண்ணப்பன் என்பவர் சிகிச்சைக்காக தனது மனைவி ஆறுமுகக்கனி என்பவருடன் வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரியாத 3 ஆண் நபர்கள் கோணம் என்ற பகுதியில் 19.09.202022ம் தேதி இரவு 08.30 மணியளவில் அரிவாள் மற்றும் மரக்கட்டையால் தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்து அவருக்கு ஏற்பட்ட காயங்களை பதிவு செய்தேன். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன.

(1). சிதைந்த காயம் 5 x 3 x 0.5 cm இடது முழங்கை முடக்கு மூட்டு பக்கத்தில்.

(2). சிராய்ப்பு காயம் 7 x 0.5 cm இடது தோள்பட்டையில் இருந்தது.

(3). சிதைந்த காயம் 2 x 0.5 x 0.5 cm இடது கை பெருவிரலில் இருந்தது.

(4). சிதைந்த காயம் 2 x 0.5 x 0.5 cm வலது பக்க தலை பகுதியில் இருந்தது.

அவருக்கு நான் சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு கொடுக்கப்பட்ட சிகிச்சையின் விபரங்களின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1 முதல் 4 வரையிலான காயங்கள் சாதாரண காயங்கள் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.6** ஆகும். 1வது காயம் அரிவாளால் ஓங்கி வெட்டும் போது, விலகும் போது அரிவாள் லேசாக பட்டால் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. 2 மற்றும் 3 வது காயங்கள் கம்பால் ஓங்கி அடிக்கும் போது ஏற்பட வாய்ப்புள்ளது. 4 வது காயம் வேலி போன்ற உயரமான இடத்தை தாண்டி விழும் போது ஏற்பட வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> –

காயம்பட்ட நபர்கள் 108 ஆம்புலன்சில் வந்தால் விபத்து பதிவேட்டில் அதனை பற்றி குறிப்பிடுவோம் என்றால் சரிதான். காயம்பட்டவர் 108 ஆம்புலன்சில் வந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு காயமும் எவ்வாறு ஏற்பட்டது என்று தனித்தனியாக காயம் பட்டவர் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஆயுதங்களை காண்பித்து ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஆயுதங்களைப் பார்த்தால் மட்டும் காயங்கள் அந்த ஆயுதத்தினால் ஏற்பட்டதா? என்று சொல்ல முடியும் என்றால் சொல்ல முடியும். சிராய்ப்பு காயங்கள் கடினமாக,

சொரசொரப்பாக உள்ள இடத்தில் விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். சிதைந்த காயங்கள் கூர்மையான எதாவது பொருளின் மீது விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நான் பார்த்த காயங்கள் வாகன விபத்தில் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நான் பார்த்த காயங்கள் காயம்பட்டவர் சொன்ன நேரத்திலிருந்து 2, 3 மணி நேரத்திற்கு முன்பாக கூட ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.30 19:40:59 +0530